# ரயில்... ஒரு நீளமான புல்லாங்குழல்!



வித்யாசாகர்

டீக்கடைகளைத் தாண்டி னாலும்.. டி.வி-யில் சேனல் சேனலாகத் தாவினாலும் இப்போது திசையெல்லாம் கேட்கிறது வித்யாசாகரின் இசை!

'தில்', 'பூவெல்லாம் உன் வாசம்', 'வேதம்', 'அள்ளித்தந்த வானம்' என அவரது சமீபத் திய ரிலீஸ் மட்டும் நான்கு படங்கள். ''இத்தனை நாளா எங்கே இருந்தீங்க?'' என்று கேட்கப் போயிருந்தோம்.

''இதே சென்னையிலதான்'' – அதிரும்படியாகச் சிரிக் கிறார் வித்யாசாகர்.

''தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்னு நிஜமாவே சேனல் சேனலா தாவிட் டிருக்கேன்!''

வித்யாசாகரின் ஸ்பெஷலே அதுதான். தமிழில் பரபரவென படங்கள் பண்ணும்போதே கேரள விஜயம் துவங் கும். மூன்று ஸ்டேட் அவார்டுகள் வாங்கிவிட்டு அப்படியே தெலுங்கில் அதிரடியாக நுழைவார். திடீரென பெங்களூரிலிருந்து அழைப்பு வரும். 'வாங்க சென்னைக்கு' என்று அர்ஜுன்தான் தமிழுக்கு அழைத்து வருவார்.

'' 'பூமணம்'தான் என் முதல் படம். ஆனா, 'ஜெய்ஹிந்த்', 'கர்ணா' படங்கள் பண்ணின பிறகுதான் நான் வெளியில தெரிய ஆரம்பிச் சேன். ஒரு நடிகரோ.. டைரக்டரோ வேறு மொழிப் படங்கள் பண்ணுவதில் இருக்கிற சிரமம் எனக்கில்லை. எனக்கு நாலு மொழி யும் நல்லாவே தெரியும். அதான் ஜாலி ரவுண்ட்!''

வேகமாகவும் ஆழமாகவும் பேசுகிற வித்யாசாகரின் பேட்டியிலிருந்து...

'' 'இசை'னா என்ன..?''

''உணர்வின் வெளிப்பாடுதான் இசை. டிசிப்ளி னான வெளிப்பாடு. இப்போ 'டேய்'னு சாதாரணமா கூப்பிடறோம். ஆனா, அது ஒரு குழந்தையைக் கொஞ்சுறதுக்கா, அதட்டறதுக்கா, மிரட்டறதுக்கா, ஆச்சரியமா.. இல்லே அதிர்ச்சியா என்பதெல்லாம் அந்த 'டேய்' எப்படி வெளிப்படுது என்பதைப் பொறுத்தது. மியூஸிக் என்பது அதுதான்.

மழை பெய்ததும் மனசும் குளிர்ந்திடற மாதிரி, யானையைப் பார்த்ததும் ஜாலியாகிடற மாதிரி இசை ஒரு மூட் கிரியேட்டர்.

கோயில் மணி அடிக்கிறது, கெட்டிமேளம் கொட்டறது, துணி துவைக்கிறதுனு ஆரம்பிச்சு எல்லாத் திலயும் ஒரு மியூஸிக் இருக்கு. அதே மாதிரி சப்தம் மட்டும்தான் இசை

என்பதல்ல. தொடர்ச்சியான சப்தங்களுக்கிடையே வர்ற நிசப்தம்கூட மகத்தான இசைதான்!''



''உங்களுக்கு ரொம்ப பிடிச்ச இசைக்கருவி எது?''

''எல்லாமே பிடிக்கும்தான். ஆனா, புல்லாங்குழல் கொஞ்சம் ஸ்பெஷல். இரவில் யாருமற்ற தனிமையில் புல்லாங் குழல் இசை கேட்பது சிலிர்ப்பா இருக்கும். திடீர்னு கதவு வழியா நுழைஞ்ச காற்று வீட்டுக்குள்ள விதவிதமா டான்ஸ் ஆடிட்டு திடுக்னு ஜன்னல் வழியா ஓடிப்போயிடற மாதிரி ஒரு விளையாட்டு அது. ரயில்ல போகும்போது அதனோட கூவல், தடதடதடனு அது ஓடற வேகம், ஜகஜகஜகனு அந்த ரிதம் எல்லாமே சேர்ந்து எனக்கு ஒரு நீளமான புல்லாங்குழலுக்குள் உட்கார்ந்திருக்கிற மாதிரிதான் தோணும்!''

''இளையராஜா, ரஹ்மான், தேவா, ஹாரிஸ்னு யாரைப் பார்த்தாலும் தீவிர கடவுள் நம்பிக்கை உள்ளவங்களா இருக்காங்க. அதென்ன இசையமைப்பாளர்களுக்கு அப்படி ஒரு ஆன்மீக நாட்டம்?''

''இசையே கடவுளின் மொழிதான். சொல்லப் போனா கடவுள்தான் மிகப்பெரிய இசையமைப்பாளர். கடற்கரையில் அலைகளின் பேரோசை, மலைக்காடுகளில் மரங்களின் சிரிப்பு, இரவுகளில் பூச்சிகளின் பேச்சு, பறவைகளின் பாடல்கள், நதியின் நடனம்னு நீங்க எங்கே போனாலும் ஒரு பிரமாதமான ரீ-ரிக்கார்டிங்னால இந்த உலகத்தை நிரப்பி யிருக்கிறார் கடவுள். ஒரு குழந்தையை கண்ணா, ராஜா, பப்பி, அம்முனு விதவிதமா கொஞ்சுவது போல கடவுளுக்கும் விதவிதமாப் பேர் வெச்சுக்கறோம். அதுதான் வித்தியாசம். ஆனா, அந்த நம்பிக்கை ஒண்ணுதானே!''

''உங்களுக்குப் பிடிச்சது ஃபாஸ்ட் நம்பர்ஸா.. இல்லே மெலடியா?''

''தடதடனு அதிரடியா பண்ற பாடல்கள் சட்டுனு பத்திக்கும். 'தில்.. தில்' மாதிரி. ஆனா அத்தனை ஆரவாரமும் அடங்கின பிறகு 'உப்பா.. சர்க்கரையா'தான் நிக்கும்.

மெலடிதான் காலம் கடந்தும் கேட்கலாம். ராத்திரியில தூங்கறதுக்கு முன்னால ஏதாவது பாட்டு கேக்கலாம்னு நினைக்கிறவங்க அத்தனை பேரோட கலெக்ஷன்லயும் மெலடி பாடல்கள்தான் நிறைய இருக்கும். அது தாயோட தாலாட்டு மாதிரி!''

''போரடிக்கிற கேள்விதான்... ஆனா, உங்க பதில் தெரிஞ்சுக்க ஆசை. மெட்டுக்குப் பாட்டா – பாட்டுக்கு மெட்டா?''

''ரெண்டுமேதான்.

சில விஷயங்கள் மூட் க்ரியேட் பண்ணிட்டு அதுக்கு எழுதினா அழகா வரும். சில சந்தர்ப்பங்களில் பொருத்தமான கவிதையை எடுத்து அதுக்கு ட்யூன் பண்ணினாத்தான் பிரமாதமா வரும்.

தவிர எனக்கு மொழியும் முக்கி யம்னு ஒரு எண்ணம் உண்டு. 'மன்மத லீலையை வென்றார் உண்டோ'னு யாரோ ஒரு ரிக்ஷாக்காரர் இன்னிக்கும் பாடுறார். அது சாருகேசி ராகம்னு அவருக்குத் தெரியாது. சரியான சந்தம்கூட வராது. ஆனா, அந்த வரிகளை அவர் அவருக்கு வசதியான விதத்தில் சந்தோஷமா பாடறாரே.. அது முக்கியம்.

சத்தத்துக்குள்ளே மொழி மூழ்கிடக் கூடாது. இந்த விஷயத்துல கவிஞர் களைவிட தீவிரமானவன் நான்!''

''பழைய பாடல்களின் ட்யூனில் இசையமைப்பது, வெஸ்டர்ன் மியூஸிக்கை அப்படியே ரிபீட் அடிக்கிறது மாதிரி விஷயங்கள் இப்போ ரொம்ப அதிகமாயிருச்சுதானே?''

'' 'பம்பரக் கண்ணாலே' மாதிரி ஒரு பாட்டு வேணும்னு வருவாங்க. இல்லேன்னா நாலைஞ்சு ஃபாரின் சி.டி-க்களோட வந்து 'இந்த மாதிரி தான் வேணும்'னு கேட்பாங்க. நான் இந்த விஷயங்களை ரசிக்கறதில்லை. ஏன்னா.. இந்த வேலைகளைச் செய்ய 'மியூஸிக் எடிட்டர்ஸ்' போதும். இசையமைப்பாளன் தேவையில்லை.

ட்ரெண்ட்னு ஒண்ணை நான் நம்பறதில்லை. ஒரே மாதிரியான விஷயங்கள் வரும்போது திடீர்னு மாறுதலா ஒரு முயற்சி பண்ணினா அது 'க்ளிக்'காகும். அந்த மாறுதல்தான் வெற்றியின் ரகசியம். ஆனா, அதைப் புரிஞ்சுக்காம எல்லாரும் அதையே பண்ண ஆரம்பிச்சா போரடிச்சுடும்.

தவிர கிரியேட்டிவிட்டி என்பது டி.என்.ஏ. மாதிரி. அது உங்களுக்கே உங்களுக்குனு ஸ்பெஷலான விஷயம். அருவி மாதிரி, வெள்ளம் மாதிரி ஒரு பொக்கிஷம் அதுனு நான் நம்பறேன். நீங்களே பெஸ்ட் தந்துட்டீங்கன்னா வேற சாய்ஸ் தேட வேண்டிய அவசியம் வராதே!''

''வித்யாசாகர்னா இப்படித்தான்னு ஒரு லேபிள் குத்த முடியாத மியூஸிக் உங்களுடையது. வெரைட்டியாப் பண்றீங்க. ஆனா, பளிச்னு பேர் வரலியேனு வருத்தம் உண்டா?''

''ம்ஹூம்.. கொஞ்சம்கூடக் கிடையாது. நான் என்னோட பெஸ்ட் எதுவோ அதைத்தான் ஒவ்வொரு நாளும் பண்றேன். ஒரு படத்துக்கு இசை என்பது இன்னுமொரு பங்களிப்பு. ஆனா, அந்த ஏரியாவுல உச்சம் எதுவோ அதைத் தொட்டுடணும். என் படம்னா அது 'மியூஸிக்கல் ஹிட்'னு முதல்ல பேர் வாங்கிடணும்னு கவனமா இருப்பேன்.

நாலு வருஷம் நான் தமிழ்ல இல்லை. ஆனா, 'சிநேகிதியே' பண்ணினேன். அது ஹிட். இப்போ நாலு படங்கள். எல்லாப் பக்கமும் என் பாட்டு கேக்குது. ஆனா, எல்லாமே 'தில்' மாதிரி கமர்ஷியலா ஓடறதில்லை. அதனால படங்களோட வெற்றியும் பாடல்களுக்கு முக்கியம்.

இதையெல்லாம்விட பேர் என்ப தென்ன விளம்பரமா.. விருதுகளா.. விமரிசகர்களின் பாராட்டா... அது எல்லாமே எனக்கு எப்பவும் தாராளமா இருக்கு. என் மனசுக்குள்ள ஒரு விஷயம் உண்டு. ஒரு நல்லதை தள்ளிப்போட முடியும். ஆனா, தடுக்கவே முடியாது. அதனால நல்லதெல்லாம் நடக்கும்!''

— ரா. கண்ணன்